# ஆத்ம ஜோதி



சாரதா தேவியார்

உதம்தேசித்துள்ளார்சள

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

ஜோதி 9 | துர்முகி௵ மார்கழி௴ 1-ந்உ (15-12-56) | சுடர் 2


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | மூவர் அஞ்சலி | 33 |
| 2 | தியாகம் | 34 |
| 3 | அன்னையின் அருங்குணங்கள் | 35 |
| 4 | இயேசுநாதரின் பொன்மொழிகள் | 38 |
| 5 | நம்பிக்கையூட்டும் மொழிகள் | 40 |
| 6 | இயற்கைத்தாயே! | 42 |
| 7 | யோக ஆசனங்கள் | 44 |
| 8 | திருமுறைக்காட்சி | 48 |
| 9 | இளைஞர்கட்கோர் வேண்டுகோள் | 54 |
| 10 | ஞானவாசிட்டம் | 56 |
| 11 | புண்ணியம்—பாவம் | 61 |
| 12 | சுவாமி சிவானந்தரின் அறிவுரைகள் | 64 |
| 13 | பிறரிடமும் கடவுளைக்காணலாம் | கவர் 3-ம் பக்கம் |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூபா 75: வருடச்சந்தா ரூபா 3.
தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்: நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி [இலங்கை]




## மூவர் அஞ்சலி.

### இராமகிருஷ்ணர்.

ஓடும் பொன்னும் ஒன்றெனவே
உறுதி கண்ட உள்ளத்தான்,
ஏடும் குருவும் இல்லாமல்
யாவும் அறிந்த பேரறிஞன்
ஈடில் அருள்மா முனிவன்ஸ்ரீ
இராம கிருஷ்ணன் திருநாமம்
நாடும் நகரும் போற்றிட வெந்
நாளும் வாழ்க! வாழ்கவே!

—

### சாரதாதேவியார்.

மண்ணில் வாழும் வாழ்நாளில்
மாலையிட்ட மணவாளன்
கண்ணிற் கண்ட கடவுளெனக்
கருதி வாழ்ந்த மாதேவி
அண்ணல் ராம கிருஷ்ணரின்
அருமை மனைவி சாரதையை
பண்ணில் பாடிப் புகழ்வோமே
பாதபூசை செய்வோமே.

—

### விவேகானந்தர்.

சீர்பெருத வங்கநிலம் சிறக்கவந்தோன்
ஸ்ரீராம கிருஷ்ணபதம் சிரமேற்கொண்டோன்,
பார்புகழும் வேதாந்தப் பயிர்வளர்த்தோன்.
பாரதத்தின் பெருமையெங்கும் பரவச்செய்தோன்
வேர்பறிய எதிர்வாதம் விரித்துக் கூறி
வீண்வாதம் செய்பவரை வென்ற வெற்றித்
தார்புனைந்த தவயோகி விவேகானந்தன்
தாள்பணிந்து வாழ்வோமித் தரணிமீதே.

-கவிமணி தே. வி.-

## தியாகம்.

[சுத்தானந்தர்]

மகா காளியின் வரம்பெற்றுவந்த குரு கோவிந்தன் ஆனந்தபுரியில் ஒரு பெரிய சக்தியாகம் நடத்தினான். ஏராளமான சீடர் வந்து கூடினர். குருவைப் போற்றினர். ஸத் ஸ்ரீ அகால் என்று முழங்கினர். சீடர்முன் கனல்பறக்கும் விழிகளுடன் தோன்றி வீரவாளை உயர்த்தி "இந்தவாளில் சக்தி இறங்கியிருக்கிறாள். நமது பாரததர்மத்தைக் காக்கலாம். நாட்டிற்கு விடுதலையுண்டு, ஆனால் அதற்காக ஐந்துபேர் பலியாகவேண்டும், மகாகாளி கேட்கிறாள்! யார் வருகிறீர்கள்?" என்று கூறினான். சபையில் பேச்சு மூச்சில்லை. எங்கு நம்மைப் பலிவாங்கிவிடுவானோ என்று சிலர் நழுவினர். "யாகம் என்றால் முந்தினீர், தியாகமென்றால் பிந்தினீர். இவ்வளவு பேடித்தனமிருந்தால் விடுதலை எப்படி வரும்? ஆண்மையற்ற அலிகளுக்கு குருவாயிருப்பதைவிட நானே சண்டிக்குப் பலியாகிறேன்" என்று திரும்பினார் கோவிந்தராய். "எளியேன் இதோ வந்தேன்! மகாகாளி ஏற்றுக்கொள்ளட்டும்!" என்று ஒரு ஏழைநாவிதன் முன்வந்தான். "நீயே வலியன்," என்று அவனை உள்ளே கூட்டிச்சென்று இரத்த வாளுடன் வந்தார் குரு. மீண்டும் நான்கு பேர், எளியர் வந்தனர். ஐந்துபேரும் பலியானார்கள் என்றே சபை முழுதும் நம்பியது. ஆனால், அப்படியல்ல, குருவின் வாளில் தோய்ந்தது ஆட்டுரத்தமே. மறுநாள் சீடரையெல்லாம் கூட்டினார் குரு. அந்த ஐவரையும் அவர்முன் கொணர்ந்தார். "சீடர்களே! கல்வி, செல்வம், பிறப்புகளால் அல்ல, ஆளுக்கழகு ஆண்மையும் தியாகமும், இத்தனை பேர்களில் இந்த ஐவரே தமது உயிரை தர்மத்திற்குப் பலிதானமாக்கத் துணிந்தனர். சமயதீட்சை ஈந்து அவர்களை முதல் கால்சாவீரர் ஆக்கினார். அவர்களுடைய வீரத் துணிவினால் எல்லாச்சீடரும் கால்சாவீரராயினர். தியாகமேயாகம்.



## அன்னையின் அருங்குணங்கள்

[ஆசிரியர்]

தூய அன்னை சாரதா தேவியாரின் வரலாறு 'ஆத்மஜோதி' வாசகர்கள் நன்கறிந்த ஒன்றாகும். அன்னாரின் வாழ்க்கைக் குறிப்புகளும் அருள் மொழிகளும் பலமுறை இச்சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவரின் ஜயந்தி விழா இம்மாசம் 9-ந் தேதி [23-12-56] நிகழ்வதை முன்னிட்டு, அன்னையாரின் அருங்குணங்கள் சிலவற்றை மாத்திரம் வாசகர்கட்குத் திரும்பவும் நினைவூட்ட விரும்புகின்றோம். தொன்றுதொட்டு மகிமை பொருந்திய மார்கழி மாசத்திற்கு சென்ற நூற்றாண்டில் ஓர் புதுச் சோபையை அளித்தது பகவான் ரமணரதும் சாரதாமணி தேவியாரதும் ஜென்ம வைபவங்களாகும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரும் சாரதா தேவியாரும் வாழ்ந்து காட்டிய இல்லற வாழ்வு மனிதவர்க்கத்தின் ஞானவாழ்க்கை வரலாற்றிலே ஓர் ஒப்புயர்வற்ற சிறப்பும் மகிமையும் பொருந்திய நிகழ்ச்சியாகும். அவர்கள் இருவரது தாய்மையோ கருதரிய உயர்ந்த படியைச் சார்ந்ததாகும். மாதரனைவரையும் பராசக்தியின் அம்சமாகக் கண்ட பரமஹம்சர் தமது சொந்தப் பத்தினியாரை ஓர் தேவிப் பதுமையாகப் பாவித்து வழிபட்டு, அந்த வழிபாடு முடிவில் ஜெபமாலையை அவர் திருவடியில் சமர்ப்பித்த பின்னரே தமது நீண்ட அபூர்வ சாதனையை முற்றுப் பெறச்செய்த புதுமுறையானது அரிய பெரிய அத்யாத்ம தத்துவங்களை அடக்கியுள்ளதெனலாம்.

சென்ற நூற்றாண்டில் இராமகிருஷ்ணர் உலகின் ஆன்ம புனருத்தாரணத்திற்காக எழுப்பிய அருங்கோயிலின் எழுந்தருள் மூர்த்தியாக விளங்கியவர் விவேகானந்தரெனில், அதின் ஆதார சக்தியாக அமர்ந்திருந்தவர் சாரதா தேவியாராகும். பரமஹம்ச தேவரின் மஹாசமாதிக்குப்பின். அவரின் சீடர்கள் ஒருங்குசேர்ந்து வாழ்வதற்கு இடமின்றி அலைந்துகொண்டிருந்த காட்சியைப் பார்த்துக் கண்ணீர்விட்ட அன்னையார் "பிரபுவே! தங்கள் திருநாமத்தைச்

சொல்லிக்கொண்டு, உற்றார், உறவினர், உத்தியோகம் யாவற்றையும் துறந்து, தங்கள் பணிக்கென வாழ்க்கையை அற்பணஞ்செய்த இக்குழந்தைகள் ஊண், உடைக்கு வழியின்றிக் கஷ்டப்படுதல் முறையாகுமா? அவர்களைக் காப்பாற்றுதல் தேவரீர் கடனன்றோ! எனப்பன்முறை பிரார்த்தித்தார், அப்பிரார்த்தனையின் பயனாகவே இராமகிருஷ்ணமடமும், சங்கமும் தோன்றினவென்பதை இன்று எவர்தான் மறுக்கமுடியும்?

தூய அன்னையார் தமது பூரணதெய்வத்தன்மையை தமது பெண்மை தாய்மையாகிய இரு போர்வைகளாலும் நன்கு மறைத்துக்கொண்டனர், அவர் செய்துள்ள அற்புதங்கள் பலவற்றுள் தலைசிறந்து விளங்குவது இதுவாகும், இக்காரணத்தால் அவர் காலத்தில் அவர் மகிமையைப்பலர் அறிந்துகொள்ளமுடியவில்லை. மிகவும் நெருங்கிய உறவுபூண்டிருந்த அடியாருள் சிலரே அதனை உணர்ந்தனர். எனினும் அவரது அளப்பரும் பெருமையையும், அவரது அருட்சக்தியையும், ஆத்மசித்தியையும் பரமஹம்சரைப்போல் முற்றிலும் அறிந்துகொண்டவர் விவேகானந்தர் ஒருவரே. அவரின் திருவாக்குகள் மூலமாகவே ஏனைய சீடர்கள் அந்தஉண்மைக்கு உரித்தாயினரெனலாம். அன்னையார் தம்மைப் பெருமையாகப் பேசியதே கிடையாது. ஒருமுறைமாத்திரம் பக்தர் ஒருவருக்கு "பகவான் இராமகிருஷ்ணர் கடவுளின் தாய்மைக்குணத்தை நவீன உலகுக்கு அறிவுறுத்தும் பொருட்டே தம்மை விட்டுச் சென்றனர்" என்ற பேருண்மையை இரகசியமாகக் கூறியுள்ளார்.

கீதையில் கிருஷ்ணபரமாத்மா கடவுளை வழிபடுவோரை நான்கு வகையாகப் பிரித்துக் கூறுகிறார். [1] ஆர்த்தி, சகிக்கமுடியாத துன்பத்தால் உந்தப்பட்டு வழிபடுவோர். [2] அர்த்தார்த்தி. இம்மைச் சுகங்களான பணம் பதவி முதலியவற்றைக்கோரி வழிபடுவோர். [3] ஜிஞ்யாஸு: கடவுளின் குறிகுணங்களை அறியவிரும்பி சத்திய சோதனை முதலாய சாதனைகளில் ஈடு படுவோர். [4] ஞானி: கடவுளைத்தவிர்த்துப் பிறிதொன்றுமில்லையென உணர்ந்துவழிபடுவோர், இந்த நான்கு பிரிவினர்களுள் இரண்டாவது வகுப்பினரின் வழிபாட்டை ஏற்பதற்கும் அவர்களை ஏமாற்றுவதற்கும் யோகிகளும் சுவாமிகளும் மலிந்துள்ளனர் என்ற உண்மையை



விளக்கப்போலும். தூயஅன்னையாரின் ஆசியைப் பெறச்சென்ற பக்தகோடிகள் பெரும்பாலானோர் துயரப்பட்ட வகுப்பினரும் ஞானவேட்கை கொண்டவர்களுமாக அமைந்துள்ளனர்! சாகுந்தறுவாயில் இருந்தவேளையில்கூட வாழ்க்கைத் துயரால் வாடிய சீசர்களுக்குச் சாந்திமொழிகூறி ஆறுதல் அளிக்கத்தவறியதேகிடையாது. இறுதிநாளில் அவரது உடல் சோர்ந்துபோவதைப் பார்த்த வண்ணம் கலங்கிக் கொண்டுநின்றவோர் ஏழைப்பெண்ணை அருகே அழைத்து அவளுக்கு ஆறுதல்மொழியாகக்கூறிய இறுதி உபதேசம் இந்தஉலகம் உள்ளளவும் நிலைத்துநின்று ஆயிரக்கணக்கான மக்களுக்கு சாந்தி அளிக்கும் பெற்றிவாய்ந்த ஒன்றாகும். அதனைத் தினந்தோறும் தியானித்து நாமும் நற்கதி அடைவோமாக! அந்த மணிவாக்குப் பின்வருமாறு:–

"குழந்தாய்! வாழ்வில் அமைதி வேண்டுமாயின் நீ பிறர்குற்றத்தைப்பார்க்கும் குணத்தை விட்டு உன் குற்றத்தைப்பார்க்க வேண்டும். அந்நியம் எண்ணாதே. அப்போது இந்தஉலகம் முழுவதுமே உனது சொந்தமென்பதைக் காண்பாய்."

## உடல்உபசாரம்.

உன் உடலில் மூச்சுள்ளவரையில்தான் உனக்கு உபசாரம் நடக்கும். கடைசி மூச்சுவிட்டதும் உன்மனைவியும் உன்சடலத்தைக் கண்டு அஞ்சுவாள்.

## ஈடுபாடு.

பாலன் விளையாட்டில் கருத்து செலுத்துகிறான்; இளைஞன் காதல்லீலைகள் புரிகிறான், கிழவன்குடும்பக் கவலையில் ஆழ்கிறான், எவரும் மெய்ப்பொருளின்மீது சிறிதும் நாட்டம் கொள்வதில்லை.

-சங்கரர்-

# இயேசுநாதரின் பொன்மொழிகள்.

மனிதன் வசிப்பது ரொட்டியால் மட்டும் அல்ல, இறைவன் திருவாய் மலர்ந்தருளும் திருவாக்கால் மக்கள் வாழ்கிறார்கள்.

ஃ ஃ ஃ ஃ ஃ

வலது கன்னத்தில் அடிப்பவர்களுக்கு இடது கன்னத்தைக் காட்டு.

ஃ ஃ ஃ ஃ ஃ

ஒட்டகங்கள் ஊசியின் காதில் நுழைந்து விடுவது பணக்காரன் மோட்சத்தில் புகுவதைவிட மிக எளிது.

ஃ ஃ ஃ ஃ ஃ

பரமநிலையை ஒருவன் அடைந்தால் பிறநலங்கள் தாமேவந்து அவனை அடையும்.

ஃ ஃ ஃ ஃ ஃ

ஒரு வியாபாரி விலைமதிக்கமுடியாத முத்தைப் பார்க்கிறான் அதன் அருமையை உணர்கிறான், அதனைப் பெறுவதற்காக தன் பொருளையெல்லாம் விற்கிறான். அந்தப்பணத்தைக் கொண்டு அந்த முத்தை வாங்குகிறான். அம் முத்தைப்போன்றது மோட்சநிலை.

ஃ ஃ ஃ ஃ ஃ

பிறருக்கு உதவிசெய்யும் போது உன் வலதுகை செய்வது இடது கைக்குத் தெரியவேண்டாம்.

ஃ ஃ ஃ ஃ ஃ

பரமநிலையை அடைய வீடு, மனைவி, சகோதரர், பெற்றோர், குழந்தைகள் யாவற்றையும் விட்டவர் அதனினும் பன்மடங்கு பெறுவர். இனிவரும் உலகத்தில் அழியா வாழ்வைப் பெறுவர்.



சிஷ்யர்களெல்லாம் இயேசுநாதரைச் சூழ்ந்துகொண்டு கேட்கிறார்கள். முனிவரே பரலோகத்தில் யார் உயர்ந்தவர்? இயேசுநாதர் அப்பொழுது ஒரு குழந்தையைக் கூப்பிட்டார். கையில் பிடித்துக் கொண்டார். மக்களே! கவனியுங்கள். நீங்கள் எல்லாரும் இம்மாதிரி குழந்தைகளாகாவிட்டால் பரலோகத்தை அடைய முடியாது.

ஃ ஃ ஃ ஃ ஃ

கன்னியர்கள் பத்துப்பேர் அவர்கள் தங்கள் மணாளனைக் காணச் சென்றனர். இரவுநேரம் ஆகையால் விளக்கெடுத்துப் போனார்கள். அதில் ஐவர் அறிவுடையவர்கள். பிறர் கவனமற்றவர். அறிவுள்ள பெண்கள் விளக்குடன் அதற்கு வேண்டியளவு எண்ணெயையை ஒரு பாத்திரத்தில் கொண்டுபோனார்கள். மற்றவர்கள் விளக்குமட்டும் கொண்டுபோனார்கள். சென்ற ஓர் இடத்தில் மணாளனை எதிர்பார்த்துக்கொண்டு படுத்திருந்தார்கள். தூங்கினார்கள். நடுநிசியில் சந்தடி கேட்டது. மணாளன் வந்துவிட்டான் எழுங்கள். பாருங்கள் எதிர்கொண்டழையுங்கள் என்ற குரல் கேட்டது. கன்னிகைகள் யாவரும் எழுந்திருந்தார்கள்: தங்கள் விளக்குகளைத் தூண்டினார்கள். அசட்டுப் பெண்கள் ஐவரும் எண்ணெயில்லாமல் திண்டாடினார்கள். அவர்கள் விளக்கு அணையுந்தறுவாயிலிருந்தது. கூட வந்தவர்களை எண்ணெய் கேட்டார்கள். அதற்கு அவர்கள் "சகோதரிகளே. இருவருக்கும் எண்ணெய் போதாது. நாங்கள் கொண்டுவந்த எண்ணெயைக் கொடுத்துவிட்டால் எங்கள் விளக்கு அணைந்துவிடும். நீங்கள் வெளியேபோய் வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்றார்கள். எண்ணெய் இல்லாதவர்கள் என்ன செய்வார்கள்! எண்ணெய் வாங்கச் சென்றார்கள். அந்தச் சமயம் மணாளன் வந்து சேர்ந்தான். தயாராக அங்கிருந்த கன்னிகைகளை அழைத்துக்கொண்டுவிருந்துக்கு உள்ளே சென்றான், யாவரும் சென்றபின் கதவு சாத்தப்பட்டது. மண விருந்து சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. வெளியேசென்ற கன்னியர்கள் திரும்பிவந்தார்கள், கதவைத் தட்டினர். பிரபுவைக் கூப்பிட்டனர். என்ன பதில் வந்தது, மணாளன் கூறினார், நன்கு கவனியுங்கள், உங்களை எனக்குத் தெரியாது. உங்களுக்குக் காலநேரம் தெரியாது?

---

# நம்பிக்கையூட்டும் மொழிகள்.

(அன்னை சாரதாதேவியார்)

அஞ்சற்க. மனிதப்பிறவி துன்பங்கள் நிறைந்தது. இறைவன் பெயரை ஓதிக்கொண்டே அவற்றையெல்லாம் சகித்துக்கொள்ளவேண்டும். இறைவனே மனித உருக்கொண்டு வந்தாலும் அவனால் மனம், உடல் இவற்றின் காரணமாக உண்டாகும் இன்னல்களின்றும் தப்பிக்க இயலாது. அவதார புருஷர்களும் முனிவர்களும் யோகிகளும் கூட துன்பம் அனுபவித்தே தீரவேண்டும். ஏனெனில் சாதாரணமான மனிதர்கட்கு, தகாததைச் செய்வதாலும் தக்கதைச் செய்யாமையாலும் ஏற்படும் பாவங்களை அம்மகான்கள் தாங்களே ஏற்றுக்கொண்டு உலக நன்மைக்காகத் தம்மையே பலியாக்குகின்றனர்.

எந்த மனிதனும் எப்போதும் துன்பத்தை அனுபவித்துக்கொண்டே இருக்கமுடியாது. எவனும் ஆயுள் முழுதும் துயரத்திற்கு ஆளாக மாட்டான். ஒவ்வொருசெயலும் முறையே அதனதன் பயனைத் தருகின்றது. அதற்கேற்பச் சந்தர்ப்பங்களையும் ஒருவர்க்குக் கொணர்கிறது.

என் குழந்தை சேற்றையும் புழுதியையும் பூசிக்கொண்டிருந்தால், அதைக் கழுவி என்மடிமீது அமர்த்திக்கொள்ளல் என் கடமையல்லவா? குழந்தாய்! கவலையுருதே! இவ்வுலகப் பந்தங்கள் எல்லாம் நிலையில்லாதனவே. இன்று அவையே சாரமும் பயனும் எனத்தோன்றும். ஆனால், நாளை அவை மறைந்துவிடும். இறைவனுடன் உள்ள தொடர்பே உண்மையானது.

உன் உள்ளத்தை விண்மீனைப்போல் தூயதாக ஆக்கவேண்டுமென இறைவனை வேண்டு. காலமுறை தப்பாமல் முழுமனதுடன்



செய்யப்படும் ஜெபத்தின் பலனாக, இறைவன் உன்னுடன் பேசுவதை நீ உணர்வாய். உன்னுடைய விருப்பங்கள் எல்லாம் பூர்த்தியடையும். களங்கமிலாப் பேரின்பத்தை நீ காண்பாய்.

ஒருவன் இறைவனிடம் சரண்புகுந்தால், தவிர்க்கமுடியாத விதியின் கட்டளைகளும் அகற்றப்படுகின்றன. இத்தகைய மனிதனது தலையெழுத்தை விதியே தனது கரங்களால் துடைத்து விடுகின்றது.

“என்னைப் பிரார்த்திப்போருக்கு இறக்கும் தறுவாயில் யான் அருகில் நின்று அபயம் அளிப்பேன்” என்று குருதேவர் சொல்வது வழக்கம். மேற்கூறியவை அவரது வாயினின்றும் வெளிவந்த சொற்களாகும்.

உங்கள் மனச்சுமையை ஸ்ரீ இராமகிருஷ்ணர்முன் இறக்கி வையுங்கள். கண்ணீருடன் உங்கள் துன்பங்களை எடுத்துரையுங்கள். உங்கள் கைநிறைய நீங்கள் விரும்பியவற்றை அவர் தருவதைக் காண்பீர்கள்.

யாவருடைய பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேனோ அவர்கள் பந்தமற்றவராகும் வரை, எனது இப்பூதவுடல் அழிந்த பிறகும் எனக்கு முத்தியுண்டு என்று நினைக்கிறீர்களா? நான் சதா அவர்களுடனேயே வாழவேண்டும். நன்மையோ தீமையோ அவர்களைப்பற்றிய முழுப்பொறுப்பையும் நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். என்னுடையவர் என யான் வரித்தவர்களை நான் சர்வசாதாரணமாக ஒதுக்கிவிடமுடியாது.

# இயற்கைத் தாயே !

பரமஹம்ஸதாசன்

ஆழ்ந்த துயிலினின் றே—வையகம்
யாவும் விழித்தெழ வே.—உப
சாந்த மலர்க்கரத் தால்—உஷையாய்த்
தட்டி எழுப்புகின் றாய் ! 1

இங்கிதம் புன்னகை யால்—காலைவான்
எங்கும் எழில்மணக் கச்—சுத்தத்
தங்க மயமாக் கிக்—கதிரில்
சார்ந்து சிரிக்கின் றாய் ! 2

நாற்றிசைப் புட்களி லே—மழலை
நாதம் எழுப்புகின் றாய்:—தென்றற்
காற்றினில் கொஞ்சுகின் றாய்—மலரில்
காட்டுகின் றாய்வனப் பை ! 3

குன்றில் தவம்புரி வாள்,—அதனின்று
கொட்டும் அருவியி லே—தூய
'ஒன்றை அடைக'வென் றே-மறைகளின்
உண்மை முரசொலிப் பாய் ! 4

நதியில் மணப்பெண் போல்.—மதுர
நடைப யிலுகின் றாய் ! புத்தம்
புதிய சோலையெல் லாம்—எழிற்பசும்
பொன்முகம் காட்டுகின் றாய் ! 5

பட்டப் பகலொளி யால்,—உயிர்க்குயிர்ப்
பாலைப் புகட்டுகின் றாய்:—அன்பில்
நட்ட விதையிலெல் லாம்—தளிர்விட்டு
நம்பிக்கை யூட்டுகின் றாய் ! 6

மாலைக் காட்சியி லே.—மோகன
வலையை வீசுகின் றாய்:—எழில்
நீல வான்விரி வில்.—அன்பின்
நிறைவைப் பேசுகின் றாய் ! 7

மீனணி யால்,உல கில்—பணிசெய்யும்
விதத்தைக் காட்டுகின் றாய் கலை
ஞான மதியொ ளியால்—பேரின்ப
நாட்டத்தை ஊட்டுகின் றாய் ! 8

அன்புத் தளிர்விர லால்,—கடலெனும்
அற்புத வீணையிலே.—கோடி
இன்பப்பண் மீட்டியன் றோ?—காலத்தின்
எல்லையை நீட்டுகின் றாய் ! 9

இடி முழக்கத்தி லே,—கெடுபிடி
இன்னதென் றறைகின் றாய்,—மின்னற்
கொடி யெழுத்தினி லே—வாழ்வின்
குறைவைப் பகர்கின் றாய் ! 10

மேகத்திற் குள்ளிருந் து.—கருணை
வெள்ளத்தைக் கொட்டுகின் றாய்;—ஜீவ
தாகம் தணிப்பதற் கே—ஆண்பெண்
சக்தியாய்ப் பொலிகின் றாய் ! 11

வையகத் தையிரவில்—மடியில்
வைத்துத்தா லாட்டுகின் றாய்;—நிறை
மையிருட் சாமத்தி லே—மாகாளி
வடிவில் தோற்றுகின் றாய் ! 12

எத்தனை அற்புதங் கள்—நொடியில்
இசைக்கின் றாய் புவி யில்! இயற்கைச்
சக்தி ! பேராற் றலை—முற்றும்
ஜகத்தில் கண்டவர் யார்? 13

[தவயோகி சுத்தானந்த பாரதியாரது கட்டுரை ஒன்றைத் தழுவி எழுதப்பட்டது.]

# யோக ஆசனங்கள்

(S. A. P. சிவலிங்கம். ஞானகுரு யோகாசனசாலை, சேலம்.)

[illegible] ஞாபகத்திலிருத்த வேண்டிய பத்து விதிகள்.

1 அதிகாலை நான்கு அல்லது ஐந்துமணிக்கெழுந்து வாய் பல் துலக்கி. 5 மிடறு சுத்த ஜலம் சாப்பிட்டு சில நிமிடங்களில் மலஜலம் கழித்து வயிற்றைக் காலியாய் வைத்திருத்தல் வேண்டும்.

2 ஆசனம் செய்யுமிடம் நல்ல காற்றோட்டமுள்ளதாகவும் சுத்தமாகவும் வீண்பேச்சு பேசாதவர்களுள்ள இடமாகவுமிருக்க வேண்டும்.

3 ஆசனம் செய்து முடிந்தபின் 30 நிமிடம் சென்றபின் நீரில் ஸ்நானம் செய்யவும்.

4 வாரத்தில் இரண்டுமுறை அப்பியங்க ஸ்நானம் செய்தல் நலம் அன்று மாத்திரம் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம்.

5 பொய், சூது கபடு. திருட்டு. தீய எண்ணம். கோபம். சாம இச்சை முதலிய துர்க்குணங்களை நாளடைவில் விட்டுவிடவும்

6 எச்சமயத்திலும். சிரித்த முகத்துடனும். ஊக்கத்துடனும். பணிசெய்ய சித்தமாயிருத்தல்.

7 ஆசனம் செய்ய ஆரம்பிக்கும்போது லங்கோடு அணிந்தோ அல்லது கௌபீனமோ அணிந்து இறுக்கமின்றி செய்யவும்.

8 சத்துள்ள உணவாகவும் பசுப்பால். பசுநெய் பசுவெண்ணெய் காட் காலிப்ளவர் வெண்டை முருங்கை முதலிய பல காய்களையும் கீரை வகைகளையும் வாரத்திற்கொருமுறையாக மாற்றி மாற்றி சமைத்துண்ணவும்.

9 மணித்தியாலத்திற்கொருமுறை சாப்பிடும் வழக்கத்தை விட்டொழிக்கவும்.

10 அதிக பேச்சு துவிசக்கரவண்டியில் சுற்றல் வெயிலில் அலைதல் கொச்சையான வார்த்தைகளைக் கேட்டல் பேசுதல் முதலியவைகளை அநேகமாக விட்டுவிடவேண்டும்.



## 11 உயர்ந்த ஊர்த்வ பத்மாசனம்

பழகும் விதம்:- பத்மாசன நிலையில் அமரவும். பத்மாசனம் முன் ஆத்மஜோதி பத்திரிகையில் வெளியாகியுள்ள முதல் சித்திரத்தைப் பார்க்கவும். பின் இரண்டு கைகளையும் இரண்டு பக்கத்திலும் பூமியின் கீழே யூன்றி பிருஷ்ட பாகத்தை மேலே தூக்கி கைகளில் பாரங்களைப் போடவும்.



பின் பத்மாசன நிலையோடு முன்னுக்கும் பின்னுக்குமாய் வேகமாய் ஊஞ்சல் ஆடுவதைப் போல் ஆட்டவும். மறுபடியும் இரண்டு கைகளுக்கு நடுவிலும் இரண்டு பக்கங்களிலும் ஆட்டவும். ஆட்டும் சமையம் கைகள் விறைப்பாயும் ஆடாமலும் வளையாமலும் இருக்க வேண்டும். சித்திரம் 11ஐப் பார்த்துச் செய்யவும்.


நோயர்களுக்குச் சற்றுக் கடினமான ஆசனம். பத்மாசனம் செய்து கைகளைக் கீழே இரண்டு பக்கங்களிலும் ஊன்றி மேல் தூக்கினால் கைவலி எடுக்கும். கெட்டியாக ஏதோ ஒரு வஸ்து தொங்குவது போலும் பிடித்துக்கொண்டிருக்கிற மாதிரியும் தோன்றும். எல்லாம் பழகப் பழக சரியாகிவிடும். விடா முயற்சியே தேவை.

உயர்ந்த ஊர்த்வ பத்மாசனத்தின் பலன்;- சுவாச அங்கங்களுக்கும் முள்ளந்தண்டு. கைகளின் புயம், கால்களின் மூட்டு இடுப்பு வயிறு முதலிய பாகங்களுக்கும் நல்ல இரத்தோட்டத்தையுண்டு பண்ணி சுறுசுறுப்பை உண்டாக்கும். மூச்சு வேகமின்றியும் வேகத்துடனும் செய்யாமல் சமநிலையில் மூச்சுவிட்டு இவ்வாசனம் செய்யவேண்டும்.

## 12 புஜங்காசனம்

பழகும் விதம்:- சமதள விரிப்பின்மேல் குப்புறப் படுத்துக் கொள்ளவும். பின் இரண்டுகால்களையும் நீட்டி ஒட்டியவாறு வைத்துக்கொள்ளவும். கைகள் இரண்டையும் சரீரத்தின் விலாப் பக்கமாக, பின்பக்கமாய் வைத்துக்கொள்ளவும்.

இனி புஜங்காசனம் செய்யத் தயாராகவும். அதாவது சுவாசம் ஓரளவு உள்ளிழுத்தவுடன் இரண்டு கைகளையும் முன்பக்கமாய் வைத்து உள்ளங்கைகள் மார்புக்கு நேராக பூமியில் ஊன்றவும். இவ்விடத்தில் மூச்சு முழுவதையும் உள்ளிழுக்கவும். முகவாய்க்கட்டை (தாடை) யையும் பூமியில் வைத்து நிதானமாக அவசரமின்றி மூச்சை வெளியிட்டுக்கொண்டே, கைகளைக் கீழே ஊன்றி தலையை மேல்தூக்கி நிமிர்ந்து இடுப்புடன் பின்பக்கமாய் வளைந்து




முழங்கைகள் இரண்டும் விலா எலும்பை ஒட்டியவாறு இருத்தல் வேண்டும்: சித்திரம் 12 பார்க்கவும்: தலையும் மார்பும் முதுகுப்பக்கமாய் எவ்வளவு கூடுமோ அவ்வளவு பின்பக்கமாக வளைக்கவும். அதுசமயம் மூச்சு முழுவதையும் வெளிவிட்டுவிடவேண்டும்.

இந்நிலையில் தொப்புள், அடிவயிறு, கால்தொடை, முழங்கால் பாதங்கள் முதலியவைகள் பூமியில் தொட்டவாறும், ஆனால் விறைப்பின்றியும் இருத்தல் வேண்டும். இவ்வாறு சில நிமிடங்கள் இருந்தபின் மூச்சை மெதுவாக முழுவதும் உள்ளிழுத்து தலையை முன்னிருந்தவாறு கீழே வைத்து கைகளை எடுத்து சிரமபரிகாரம் செய்துகொண்டு மறுபடியும் தேவைக்குத்தக்கவாறு செய்யவும்.



பாம்பு எவ்வாறு படம் எடுத்து தலையை மேல் தூக்கி நிற்கின்றதோ அந்நிலைக்கு சமஸ்கிருதத்தின் பெயரே புஜங்காசனம் எனப் பெயர் பெற்றது. அவ்வாறு நாம் முதுகுவரையும், இடுப்புவரையும் உடலை பின்பக்கமாய் வளைத்து இருத்தலால் பாம்புக்குள்ள வீரியமும், முதுகு இளமையும், முகப் பொலிவும் ஏற்பட்டு, முதுகெலும்பு குன்றாயௌவனத்துடன் எவ்வாறேனும் திருப்பலாம். இவற்றிற்காகவே இவ்வாசனம் ஏற்பட்டது.

ஆரம்பசாதகர்கள் உடலை முதுகுப்பக்கமாய் வளைத்தால் வலி நேரவும், இடுப்பு விண் என வலிக்கும். காலக்கிரமத்தில் யாவும் சரியாய் விடும். அடிக்கடி சித்திரம் 12 பார்த்துச்செய்யவும்.

புஜங்காசனத்தின் பலன்;- அடிவயிற்றுச் சதைகள், ஊழச் சதைகள் தொங்கி தொடைச்சதைகள் முதலிய வீண்சதைகளை வராமல் தடுத்து கழுத்துக்கும் முதுகின் எலும்புக்கும் நல்ல ஆரோக்கியமும் இரத்தோட்டமும் கொடுத்து கூன் முதுகை நேராக்குகின்றது. குண்டலினிவிழிப்பும் ஜடராக்கினி விருத்தியாகி நல்ல பசியும் ஜீரணமாகுந்தன்மையும் ஏற்படுகின்றது. உடலுக்கேற்றவாறு ஐந்தாறுதடவைகள் செய்யலாம். [தொடரும்]

---

## சாரதாதேவியின் மணிமொழிகள்

இன்னல்கள் நேர்கின்றன. ஆனால் அவை என்றும் இரா. பாலத்தினடியில் ஓடும் நீரைப்போல் அவை ஓடி மறைந்துவிடும்.

உண்மையில் இவ்வுலகமாகிய கடலைக்கடக்க விரும்பும் ஒருவன் எப்படியாவது தனது பந்தங்களை அறுத்துக்கொண்டு விடுவான். யாராலும் அவனை அவற்றில் சிக்கவைக்க முடியாது.

அஞ்சேல், இறைவன் உன்னைப் பாதுகாத்துக் கொண்டேயிருக்கிறான். அவனுக்குரிய பணிகளைச்செய். சாதனங்கள் பழகு. தினந்தோறும் சிறிது வேலை செய்தலும், மனத்திலிருந்து வீணான நினைவுகளை நீக்கிவிடும்.

# திருமுறைக் காட்சி (17)

## என்னகுறையும் இலோம்

குறைவிலா நிறைவுடையவன் ஆண்டவன் ஒருவனே. உலகில் உடம்பெடுத்த உயிர்கள் யாவும் யாதேனுமோர் குறையுடனே இருப்பதைக் காணலாம். வீடுநிறைந்த பொருள்; தோட்டம்நிறைந்தபயிர்: தொழில் நிறைந்த வேலையாளர் இவ்வளவும் இருந்துஎன்ன பயன்? ஒருநேரச் சாப்பாடுதானும் ஆனந்தமாகச் சாப்பிட்டு இன்பமனுபவிக்கமுடியாத வயிற்றுவலி. கண்ணிறைந்த மனைவி வீடுநிறைந்த குழந்தைகள். இருந்தும் என்னபயன்? இவர்களைப் பாதுகாக்கவேண்டிய பொருள் இல்லை. எல்லாவித வசதியுமுண்டு. மாதா மாதம் ஆயிரக்கணக்கில் வந்துகொண்டே இருக்கிறது. இருப்பது போதாது என்றோர் மனக்குறை. உலக ஆசை எல்லாம்துறந்தவனுக்கு ஆண்டவனை அடையவில்லையே என்றோர் மனக்குறை. மண் [முந்து] ணாசையைத் துறந்தவர்களைப்பார்க்கிறோம். பெண்ணாசையைத் துறந்தவர்களைப் பார்க்கிறோம். பொன்னாசையைத் துறந்தவர்களைப் பார்க்கிறோம். ஆனால் புகழைத்துறப்பதென்பது மிகக் கடினம். ஒருவன் எனக்குப் புகழ்வேண்டாம் என்றுசொல்லும்போதே அவனிடம் இருபங்கு புகழ்வந்து சேர்ந்துவிடுகின்றது. ஒருவன் தன்னை மண்ணாசையற்றவனாக்கும்போதே பலமடங்கு புகழ் வீடுதேடி வந்தடைகின்றது. ஒருவன் எதை உண்மையானஉள்ளத்துடன் துறக்கிறானோ அது பலமடங்கு புகழுடன் இவனைத்தேடி வந்தடைகின்றது. இத்தருணத்திலேதான் மனிதன் சோதிக்கப்படுகின்றான். சோதனையிலே தவறியும் விடுகிறான்.

பிணம் சுடுகின்றதடி என்பது ஒன்று உண்டு. பிணம் எரியும் வரை அதனால் புரட்டிப்புரட்டி எரிப்பார்கள். கடைசியாக அதுவும் அதேஅக்கினிக்கு இரையாகிவிடுகின்றது. இதேபோல மனிதன் குறையற்று வாழ்வதற்குப் ஒருவழி உண்டு இவனது ஆசைகளையெல்லாம் இறைவன்பால் திருப்பிவிடவேண்டும். கண் அழகானதைப்பார்க்கவிரும்புகிறது. இங்கேவா கோயிலில்ஆண்டவனை எவ்வளவு அழகுபடுத்திவைத்திருக்கிறார்கள். இயற்கை எவ்வளவு வர்ணஜாலங்களைக் குழைத்துப் பூசியிருக்கின்றது. என்று ஆண்டவனோடு சம்பந்தப்பட்ட பொருட்களிலே கண்ணின் ஆசையைத்திருப்பிவிட வேண்டியது. காது தகுதியற்றபாடல்களைக்கேட்கவிரும்புகிறது. இங்கேவா ஆண்டவன் திருக்கோயிலுக்குச் சென்று அவன் திருப்புகழை ஆனந்தமாகக் கேட்போம் என்று அங்கு அழைத்துச்செல்ல வேண்டியது இப்படியே ஒவ்வொரு புலனுக்குரிய ஆசையும் ஆண்டவனோடு சம்பந்தப்படுகிறபோது கடைசியாக ஆசைகள் எல்லாம் அழிந்து ஆண்டவனுடைய எண்ணம் ஒன்றேமீந்திருக்கும். இதற்காகத்தான் நம் முன்னோர் கோயில்களைக்கட்டி ஆண்டவனுக்குத் திருவிழா எடுத்தார்கள்.



*"உன்னைச் சிங்காரித்து உன்னழகைப் பாராமல்*
*என்னைச் சிங்காரித்து இருந்தேன் பராபரமே"*

என்று பாடுகின்றார் தாயுமானார்.

மார்கழிமாதத்து வைகறைப் போதிலே ஆண்டவன் புகழ்பாடிச் செல்லுகின்றனர் ஒருகூட்டம் மங்கைநல்லார். பக்கத்துவீட்டுத்தோழியரையும் துயிலெழுப்பி நீராட அழைத்துச்சென்று ஆண்டவன் திருக்கோயிலிலே வேண்டுதல் புரிகின்றனர். எம்பெருமானே உலகத்து மக்கள் எவரையும் குறையிலாது நாம் காணவில்லை. உம்மோடு நாம் சம்பந்தம் வைத்துக்கொண்டமையினால் குறையிலாது வாழவிரும்புகின்றோம். அதனை நீர் எமக்கு அருளுவீராக.

இன்று உலகில் ஒருமோகம் தொடங்கியுள்ளது. அது பழமை மோகம். தமது பழமையை அறிவதற்கு நிலத்திலே ஆயிரக்கணக்கான அடிகள் தோண்டுகின்றனர். பாஷையிலே, சாதியிலே, நாகரிகத்திலே பழமையைப் போற்றுகின்றனர். பழம்பெருமை கூறி மகிழும் மக்கள் நம்முன்னோர் காட்டிவைத்த அறவழியைக்கைவிட்டுவிடுகின்றனர். சாற்றினைக் கைவிட்டுச் சக்கைக்காகச் சண்டையிடுகின்றனர். உலகில் எனது சாதி பழமையானது. எனது பாஷை பழமையானது. எனது சமயம் பழமையானது என்று

தர்க்கமிடும் மனிதன் தான் கூறும் பழமைக்குப்பழமையாக ஒன்று இருப்பதை மறந்துவிடுகின்றான். ஒருவனை அழைத்து உன் அப்பா யார் என்றால் சொல்லுவான். அப்பாவின் அப்பா என்றால் கொஞ்சம் யோசித்துச் சொல்லுவான். அவருடைய அப்பா என்றால் தெரியவே தெரியாது. உன்னுடைய நூறாவது முந்திய தலைமுறையைச் சிந்தித்துப்பார் என்றால் மனதால் கற்பனைபண்ணிப்பார்க்கக் கூடமுடியவில்லை அவனால்.

சீனத்திலுள்ள ஒருவன் தனது நூறாவது தலைமுறையை ஆய்ந்து தனது பழமை எங்கிருந்து ஆரம்பமானது என ஆராய்கின்றான் என வைத்துக்கொள்வோம். இந்தியனும் அப்படியே ஆராய்கின்றான் என வைத்துக்கொள்வோம். பலபல தேசங்களிலிருந்தும் ஆராய்ச்சி வந்தாலும் அவர்கள் ஆராய்ச்சி எல்லாம் ஒருபுள்ளியில்வந்து சந்திக்கின்றன. அந்த இடந்தான் ஆண்டவன். அந்த இடத்திற்கு வந்த உடனே அவர்களுக்கு அப்பாற்செல்ல முடியவில்லை. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொருசாதியும் ஒவ்வொருபாஷையும் தாம்கண்ட பழமையானபொருள் இறைவன் என்ற முடிபுக்கே வந்துள்ளன. இந்த உண்மையை மக்கள் நாவாற் பேசுகிறார்களேதவிர உள்ளூர உணர்ந்ததாகத் தெரியவில்லை. உணர்ந்திருந்தால் இன்றைய மொழிச்சண்டை, சமயச்சண்டை, சாதிச்சண்டைகளுக்கு இடமேயில்லை. இறைவனை மத்தியாக வைத்துக்கொண்டே உலகம் ஒரே குடும்பமாக அமையவேண்டி உள்ளது. ஆகவே பழமை மோகங்கொண்டோர் ஆய்ந்துகண்ட ஒரே ஒரு முடிபு

முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள் ஆண்டவன் என்பதே.

புதுமையில் மோகங் கொண்டோர் பலரைக் கண்ணுற்காண்கின்றோம். புதுமை புதுமை என்று சொல்லிக்கொண்டு மிருகங்களிலும் கேடான வாழ்க்கைநடத்தும் மக்களையும் காண்கின்றோம். இந்த அநாகரிக ஒழுக்கங்களுக்கு நாகரிகம் என்றும் பெயரிட்டுத் தமது கட்சிக்கு ஆள்சேர்க்கின்றனர். இன்றைய பள்ளி மாணவனிடம் மிகப்பிந்திய புதுமை என்னவென்றால் அணு என்பான்.



பழமையான மக்களின் நாகரிக வளர்ச்சியைக் குறிப்பிடும்போது கற்காலம், செம்புக்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் எனக்குறிப்பிடுவது போல இக்காலம் அணுயுகம் என்பார். இன்று அணுவாய் இருக்கும் புதுமை நாளை பழமையாகின்றது. புதுமை என்று சொல்வது அவன் ஆராய்ந்து கண்டுபிடித்த நாளுக்குத்தான் பொருந்தும். அடுத்த புதுமை வந்ததும் இது பழமையாகின்றது. கல்லை ஆயுதமாக உடயோகித்த மனிதன் புதிய கற்காலத்திலும் வாழ்ந்துள்ளான். அன்று அது அவனுக்குப் புதுமையாய் இருந்தது. இன்று அணுயுகம் பழமையாகிறது. புதுமைக்குப்புதுமை எது என்று ஆராய்ந்தால் அதற்கும் அந்த ஆண்டவனுடைய பெயரே முன்வந்து நிற்கின்றது.

ஆண்டவன்புகழை ஏத்தவந்த பெண்கள், ஆண்டவனை உலகிலே "வேறு ஒருவரும் தம்மை விஞ்சிவாழ்த்தாதவகையில் வாழ்த்தவேண்டுமென்று யோசித்தார்கள். மிகச்சுருக்கமான இரண்டு வார்த்தைகளிலே அடக்கி விட்டார்கள். அவைதான் பழமை, புதுமை என்பன. பழமை, புதுமை என்றால் கருத்துத் தெளிவாகவில்லை. அவர்கள் வாழ்த்திய வகையே நீங்களும் வாழ்த்துங்கள்.

*முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே*

முந்தியதாகிய பழம் பொருளுக்கும் முந்தியதாகிய பழம்பொருளே பின்னையதாகிய புதுப் பொருளுக்கும் மறுபடியும் அப்படிப்பட்ட புதியவனே! என்பது பொருள். இதனையே இன்னொருவர்

*"முன்னிலும் முன்னவன் பின்னிலும் பின்னவன்"*

என்கின்றார்.

பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் உள்ள எம் இறைவரே எமக்கு உண்டானசிறப்பு உம்மைஇறைவராகப் பெற்றதினாலல்லவா? கம்பர் ஓரிடத்திலே சொல்லுகின்றார். சீதை அணிகலன்களால் அழகுபெறவில்லையாம். அணிகலன்கள் சீதையைச் சேர்ந்தமையால் அழகுபெற்றனவாம். இன்று

வார்தாவில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு. அரியநாயகம் அவர்கள் ஒரு இலங்கையர். அவர் அமெரிக்கா சென்றபோது நான் காந்தி பிறந்த ஊரிலிருந்து வந்தவன் என உரிமை கொண்டாடினார். அதேபோல் நாமும் எம்மை அறிமுகம் செய்யும்போது பிரபல்யமான ஒருவர் பெயரைக்கூறி அவருடைய உறவினர் என்று எம்மையெல்லாம் அறிமுகம்செய்துகொள்வோம். இதையே அப் பெண்கள் சொல்லி வியக்கின்றார்கள்.

*"உன்னைப் பிரானாகப்பெற்ற உன் சீரடியோம்"*

உன்னை இறைவனாகப்பெற்ற உன்னுடைய சிறப்பையுடைய அடியோம் என்கின்றார்.

மனிதன் எதற்குப் பணியவேண்டுமோ அதற்குப் பணிவதில்லை அரைக்காசுக்காக ஆயிரம்பேரையேனும் அலுப்பின்றிப் போய்ப்பார்ப்பான். நல்லாரைக் காண்பது நன்று எனஓர்ந்தானில்லை. அவரோடு இணங்கி இருப்பது நன்று எனவும் ஓர்ந்தானில்லை. 'பொய்மையாளரைப்பாடாதே' என்று சுந்தரர் வேண்டுகின்றார். இறைவனும் இறைவனடியாரும் ஒன்றே, இருவருக்கும் வித்தியாசமில்லை. ஆனபடியால் உனது அடியார்தாள் பணிவோம். அதுமாத்திரமன்று அவர்களுக்குப் பக்கத்தே எப்போதும் விட்டு நீங்காதிருப்போம். அதனால் எமக்கு நிறையப் பயனுண்டு. அவர்கள் முன்னிலையில் ஆத்மீக அலை ஒன்று வீசுகிறது. அவர்கள் பக்கத்தே இருக்கும் போது அவ்வாத்மீக அலைக்குள் நாமும் அகப்பட்டுஅவர் மயமாகி விடுகின்றோம். உனதடியார்போல் நடித்து வீடுபெறுவதற்கும் ஒரு தகுதி ஏற்படுகின்றதல்லவா? நல்லார் சொற் கேட்பதற்கும் நல்லார் குணங்கள் உரைப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. தொண்டர் தம் பெருமை உரைக்கவும் பெரிதே. ஆதலால்

*"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்"*

உன்னோடுபூண்ட சம்பந்தத்தால் உன்னுடைய மெய்யடியார்களுடைய பாதங்களை வணங்குவோம். அவ்விதம் வணங்கியபடியே அவர்களுடைய பக்கத்தில் இருப்போம். இப்படிப்பட்ட அடியவர்கள் தாம் எமக்கு எல்லாவகையிலும்உரியவர்கள். அவர்களைத்தான் நாம் கணவராகக்கொள்வோம்.

இன்று பொருள் உள்ள பெண்ணை ஆடவன் விரும்புகிறான். பொருளுக்கே முதல் இடம். குணமும் அழகும் அடுத்தபடியாக இடம் பெறுகின்றன. அதுவும் இடம்பெறுகின்றது என்று சொல்வதற்கில்லை. பொருள் இவற்றைப் பூசி மெழுகி உள்ளதுபோலக் காட்டுகின்றது. அதேபோல் பெண்களும் உத்தியோகம் புருஷலட்சணம் என்றே விரும்புகின்றனர். அன்று வாழ்ந்த பெண்கள் ஆத்மீகவாழ்வில் ஊறித்திளைத்து வாழ்ந்தனர். இறைவன் நினைவோடு வாழ்ந்தனர். வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து வாழ்ந்த



னர். ஆதலால் தமக்குவரும் கணவரும் ஒரு சிவனடியாராக வர வேண்டும் என்று விரும்பியதில் வியப்பில்லை.

*"அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து*
*சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்"*

எல்லாவகையிலும் உரியர் யாரோ அவரே கணவர் என்ற சொல்லுக்குத் தகுதியாவர். திருமணம் என்றதும் முதலில் பொருத்தம் பார்ப்பது மரபு. எல்லாவிதமான விஷயங்களிலும் கூடுதலான பொருத்தம் உடையவரே கணவராகத் தெரியப்பெறுவார். இப்பொருத்தங்கள் அற்ற திருமணங்கள் கண்டதும் காதல்கொண்ட திருமணங்கள் கோட்டில்சென்று சீரழிவதை இன்று கண்கூடாகக் காண்கிறோம். இறைவரே உமது அடியவர்கள் எதை விரும்புவார்களோ அதையே நாமும் விரும்பி அவர்க்குப் பணிசெய்வோம். இதையே எமக்கு நல்குவீராயின் நாம் யாதோர் குறையும் அற்றவர்களாக வாழ்வோம்.

உமது அடியார் பதங்களைப் பணிவோம் அவர்கள் பக்கத்தே நீங்காது உடனுறைவோம் அத்தகைய அடியார்களே எமது கணவர் ஆவர் அவர் விரும்பியபடியே பணிசெய்வோம். இத்தகுதியை எமக்கு அளித்தால் யாம் ஓர் குறையுமற்று வாழ்வோமென்று பிரானிடம் வேண்டினர் பெண்கள். இதனை மணிவாசகப்பெருந்தகையார் சித்திரிக்கும் வகையைப் பாருங்கள்.

*முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே*
*உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீர்அடியோம்*
*உன் அடியார் தாள்பணிவோம் ஆங்குஅவர்க்கே பாங்காவோம்*
*அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து*
*சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்*
*இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்*
*என்னகுறையும் இலோம்ஏல்ஓர் எம்பாவாய்.*

எல்லாவற்றிற்கும் முந்தியதாகிய பழம் பொருளுக்கும் முந்தியதாகிய பழம் பொருளே! பின்னையதாகிய புதுப்பொருளுக்கும் மறுபடியும் அப்படிப்பட்ட புதியவனே! உன்னை இறைவனாகப்பெற்ற உன்னுடைய சிறப்புடைய அடியோம் உன்சம்பந்தத்தால் உன்னுடைய மெய்யடியார்களுடைய பாதங்களை வணங்குவோம். அவ்விதம் வணங்கியபடியே அவர்களுடைய பக்கத்தில்இருப்போம். அவர்களே எங்களுடைய கணவர்கள் ஆவர். அவர்கள் விரும்பிச் சொன்னவண்ணமே நாங்கள் அடியாராய்ப் பணிசெய்யக்கடவோம்: எம் இறைவனே! எங்களுக்கு இந்தவிதமாகக் கிருபைசெய்வீராகில் எந்தக்குறையையும் உடையோம் அல்லோம்.

# இளைஞர்கட்கோர் வேண்டுகோள்.

(தென்னாப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

கடவுளுக்கும் நமக்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தை நிதர்சனமாக்கப் புகுந்தது மதம். அது பல தரத்ததாக அமைந்துள்ளது. அவ்விதம் அமைந்தன பலவற்றுள்ளும் தலைக்கண்ணுள்ளது சைவ சமயம். இதன் உண்மையை நிலைநிறுத்த வந்தவர் நால்வர். அந் நால்வருள் முதல்வர் சம்பந்தராவர். இவர் கண்ட தெளிவை உணர்த்தும் அவரது திருப்பதிகங்கள் கடவுளின் இலக்கணங்களை மிகவும் தெளிவாக விளக்குகின்றன. இதனை—இவ்வுண்மையினைப் பிற அன்னியநாட்டினர் தத்தம் மொழிகளில் பெயர்த்துவைத்துப் பயன்படுத்துகின்றனர். எனவே, நாம் அசட்டையாகவிருப்பது தகுதியுடையதன்று.

நம் இளைஞர்கட்கும் சமய உணர்ச்சியும், மதப்பற்றும் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன. அவ்விதம் குறைந்து வருவது சமூக வளர்ச்சிக்குச் சிறிதும் உதவிசெய்ய முடியாது. நமது சமய உண்மைகளை நாம் ஆராய்ச்சிசெய்தே உணரவேண்டும். இதில் துவேஷ புத்தியாவது, குதர்க்கவாதமாவது கிளம்பிவிடலாகாது. நிதான புத்தியுடன் ஈசுவர பக்தியும், நம்பிக்கையும் நம்மில் இருந்தால்தான் உண்மையின் தெளிவுண்டாகும்.

நம்பிக்கையும், ஆராய்ச்சியும் ஒன்றுக்கொன்று எட்டமுடியாத மாறான இரண்டு கோடிகளாக இருப்பினும். ஒவ்வொன்றின் நிலைப்பிற்கும் மற்றொன்று அடிநாதமாக இலங்குவதாகும். நம்பிக்கை ஆராய்ச்சியின்றியும், ஆராய்ச்சி நம்பிக்கையின்றியும் நிலைப்பதில்லை. இவ்விரண்டிற்கும் இவ்வளவு நெருங்கிய சம்பந்தமிருக்கின்றது. நம்பிக்கைப் பிழம்பின் ஆவேசத்தில் ஊஞ்சலாடுகிறவர்களை, ஆராய்ச்சிக் காரர்களென்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் கூட்டத்தாருக்குக் கொஞ்சமும் பிடிக்கிறதில்லை.

கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தை நிதர்சனமாக உணர்ந்த அனுபூதிகள் பெருகிய நமது தமிழ் நாட்டில், தற்காலம் எய்தியுள்ள நிலை மிகவும் வருந்தற்குரியது, ஆராய்ச்சிக்காரரெனப்படுவோர் உண்மையில் ஆராய்ச்சியாளராக இருக்கவில்லை. ஆனால் கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியில், நம்பிக்கைப் பிழம்பின் பலத்தில் முனையுமொருவன் நிச்சயம் வெற்றிபெறுவான் அவ்விதம் வெற்றிபெற்றவர்கள் காவியத்தும். ஓவியத்தும் தாம் கண்ட சுவானுபவமான சத்திய தரிசனத்தைப்பொறித்துவைத்தனர். காவியமும், ஓவியமும் கண்கூடாகக் காட்டுவது கடவுளின் நிலையைத்தான் என்பது உண்மை. உண்மைகண்ட மெய்ஞ்ஞானிகள் தங்கள் அனுபவங்களை, அதாவது தாங்கள் கண்ட உண்மைகளைப் பரவெளியின் மேலீட்டால் உள்ளம் பறிகொடுத்து மொழிந்த திருவாய் மொழிகள் உற்றுநோக்குவோர்க்குக் காவியமும், ஓவியமும் குறிக்கும் குறிக்கோள் இன்னதென்பதும், அதன்வசத்துள்ள நெறி நேர்மையும் இனிது விளங்குவதாம்.



மதங்களின் தத்துவமெல்லாம் பணிசெய்து கிடப்பதன்கண் அடங்கும். தீர்வைபெற்ற பெரிய முனிவர்களும் பணிசெய்து கிடத்தலே கடனென்று தம் தம் உலகிற்கு உரிய சேவை செய்தனர். செயற்கரியதான காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள் பெரியவர்கள் அது எப்படி முடிந்தது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். அது ஜாலவித்தையல்ல. மந்திரமும் தந்திரமுமல்ல. நம்பிக்கையென்னும் நாதத்திற்கு உலகு முழுவதும் அனுதாபம் காட்டும் என்பது விதி. நீங்கள் நம்பிக்கையுடைய தீரர்களாக உங்களுடைய ஊக்கம் நிறைந்த கவனங்களைக் கருதிய தேசப்பணியில் செலுத்துங்கள் வெற்றி உங்களுடையதாகவிருக்க உங்களைச் சுற்றியுள்ள பிரகிருதி தேவியின் ஒவ்வொரு அம்சமும் அது நாதஞ்செய்துகொண்டிருக்கும். உங்கள் நாடும், மதமும் பரிசுத்தமாக மிளிர, அரியன அனைத்தும் உங்களுக்கு மிக மிக எளிதாக அமையும்.

*"எங்கும் அன்பரைப் பூசைசெய்து எழுபிறப்பறுப்போம்*
*எங்கும் நாயகன் வடிவுணர்ந்து இருண்மலங்களைவோம்"*

இதுதான் பெரியார்—அதாவது சைவராயினர் கண்ட வெற்றியாகும். இக்காட்சியினை காலகதியின் போக்கில் இழந்தநாம் திரும்பவும் அடைந்து சீர்பெற முயல்வோமாக.

# ஞானவாசிட்டம்.

## இராமன் சீவன்முத்தனானநெறி.

இராமபிரான் நான்கு வேதங்களையும் சகல சாஸ்திரங்களையும் அப்பியாசம் செய்து விளையாட்டினால் யாதுபயமென்று ஒன்றுக்கும் பயப்படாமற் சிறிது நாள் இருந்தார். விளையாட்டிட்டமும் நீங்கியது. ஆத்மீக எண்ணங்கள் உதயமாகின. தபோதனர்வசிக்கும் புண்ணியாச்சிரமங்களைத் தரிசிக்க ஆசைகொண்டார். மனம் பரிபாகம் அடைவதன்முதல் அறிகுறி இப்படியானபுண்ணியயாத்திரைகள் செய்வதில் விருப்புண்டாதல். யாத்திரையில் ஆசைகொண்ட இராமர், தந்தையிடம் நேராகச்சென்றார். தந்தையின் பாதங்களை அன்போடும் வணங்கினர். "அன்புத்தந்தையே பழமையான புண்ணியதீர்த்தங்களையும், தேவாலயங்களையும், முனிவர் தபோவனங்களையும் உமது தயவினால் தரிசிக்க எனது மனம் நினைத்தது. தங்கள் அன்பான உத்தரவை நாடி நிற்கின்றேன்" என்று வேண்டிநின்றார் இராமர். தசரதர் வசிட்டரோடும் ஆலோசித்துச் சீக்கிரமாகச் சென்று திரும்பும் மகனே என்று விடைகொடுத்தார். இராமர் தந்தையின் பாதங்களைப் பணிந்து யாத்திரைக்குப்பிரயாணமாயினர். தம்பிமார்களும் உடன்சென்றனர். கோசலநாட்டைக்கடந்து பரவிய நதிகளையும், தபோவனங்களையும் துறவிகள் ஆச்சிரமங்களையும் தரிசித்தனர். சாதுக்கள் தரிசனத்தினால் சஞ்சலம் அகன்று சாந்தி பெற்றனர். அயோத்தி நோக்கித் திரும்பினர். யாத்திரைவாசிகளைத் தரிசிக்கவும், அவர்களுக்கு ஆசிகூறவும் நகரமாந்தர் திரள்திரளாகக் கூடி வந்தனர். ஆடவர் புட்பத்தினாலும் மாதர்கள் பொரியினாலும் அஞ்சலிகொடுத்து ஏத்தினார்கள்.

யாத்திரையின்பின் இராமருடைய தினசரிவாழ்க்கையில் மாறுதல் உண்டாயது. அதிகாலை நான்குமணிக்கே நித்திரைவிட்டெழுவார். முதலில் தாய்தந்தையரை வணக்கம் செய்வார். பின்பு வசிட்டமுனிவருடைய பாதங்களைவணங்கி அவரிடம் ஞானக்கருத்துக்களைக் கேட்டறிவார். மக்களுடையதுன்பத்தை விசாரித்து அறிவார். அவர்கள் துன்பத்தைத் தன்துன்பமென்று கருதி நீக்குவார். இராமருக்கு வயது பதினைந்தின் எல்லையை அடைந்தது. வயதிற்கேற்ற சாதாரணகுணங்கள் அவரிடத்துக் காணப்பெறவில்லை.

சரீரத்திலுள்ள அழகு நாள்தோறும் குறையத் தொடங்கியது. செவ்விய குளிர்ந்தமுகம் வெளுத்துத்தோன்றியது. தனித்திருக்கையில், பத்மாசனத்தில் தியானநிலையில் இருப்பார். அல்லது கன்னம் ஒன்றில் கையைத்தாங்கி ஆழ்ந்த ஆலோசனையில் இருப்பார். இவ்வுலகச்செயல்கள் செய்வதில் திரிகரணங்களும் ஓய்ந்தன. எழுதிய [illegible]ரம்போல் இராப்பகல் காணப்பெற்றார். தந்தை தசரதர் பா[illegible]தார். மகனை மடிமீதிருத்தினார். மகனே கவலை [illegible] கேட்டார். யாதோர் க[illegible]லை என்று பதி[illegible]தச் சும்மா இருந்தார். அத்தருணத்தில் விசுவாமித்திர முனிவர் ஆங்குத் தோன்றினர். முனிவரைக்கண்டதும் தசரதர் உரியமுறைப்படி உபசரித்து வணங்கினர். முனிவர்வரவால் மகிழ்ந்த தசரதர் பின்வருமாறு புகழ்கின்றார்.

சுவாமீ, அடியேன் சிந்தியாத காலத்திலும் தங்கள் பெருங்கருணைச்சிறப்பினால் எளிதாக எழுந்தருளி என்றுமில்லாத[illegible]சியை நல்கினீர். தங்கள் வரவினால் சூரியனைக்கண்டு மலர்ந்த தாமரையைப்போல் ஆனேன். இப்படிப்பட்ட ஒப்பற்ற சுகத்தை எப்போதுமடைந்திலேன். மழையில்லாதகாலத்தில் வருந்தும் பயிரைக் குளிர்விக்கின்ற மழை போல் வந்தீர். குருடன் பெற்று மகிழ்ந்த கண்போன்று நின்காட்சி எனக்கு இன்பத்தை ஊட்டுகின்றது. இத்தேகத்தோடு ஆகாயத்திற் பிரயாணம் செய்தால் என்ன இன்பமடைவேனோ அதுபோலவும், திருப்பாற்கடலிலுண்டாயதேவாமிர்தம் எனதுகைக்கு எட்டியதுபோலவும், எமதுபிதாவாகிய தேவரீர் எழுந்தருளிய சுகமானது தேகமுழுமையும் கங்கையைப்போலக் குளிர்விக்கும்படியிருந்து எனதுள்ளத்தின் தளர்ச்சியை எல்லாம் நீக்கினது.

சுவாமி தாங்கள் இவ்விடத்தில் எழுந்தருளியவரவானது அதிசயமாம். தங்கள் திருவுளக்கருத்து எதுவோ? அதைத்தர இசைந்

திருக்கிறேன். அரசர்கள் பணியவாழ்கின்ற தசரதமஹாராஜாவே! குருவாகிய வசிட்டரது வாக்கைத்தட்டாதவரே! மேலான சூரிய வமிசத்திலுதித்தவராதலால் உமக்குத்தகுந்த வசனத்தைச் சொன்னீர். யான்செய்யும் யாகத்திற்கு இடையூறு விளைக்கும் இராட்சதர்களின் துன்பத்தைத் தாங்கமாட்டாது நினது துணைநாடி வந்தேன். ஆதலால் தயவுசெய்யவேண்டும். நீர் கொடுக்கத்தக்கவர் என்று உம்மை அரியதஞ்சமென்றடைந்தேன். உமது மூத்தகுமாரனை இராகவன் என்ற குழந்தையைத் தருவீராக. இராட்சத பலத்தை இராகவன் ஒருவனே வெல்லும் சக்திபடைத்தவன். அரசனே, இராகவன் பாலன் என்ற அச்சத்தை விட்டுவிடு. இராகவன் பெருமையை வசிட்டரையும் என்னையும்போன்ற ஆசாரியர்களே அறிவார்கள், மற்றையோர் அறியார்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட தசரதர் அயர்ந்து சோர்ந்து வருந்தினர். சுவாமி இராகவனோ பாலன். பதினைந்து வயதினன். யுத்தஞ்செய்தறியான். நடுங்கச் செய்யும் வல்லமையுடைய இராட்சதர்களுடன் போர் செய்ய வலியில்லாதவன். நால்வகைச்சேனையோடும் அடியேனே நேரிற் சென்று இராட்சதர்களுடன் போரிடுவேன். சுவாமீ எத்தனையோ ஆண்டுகளுக்குப்பின்பு கிடைத்த புத்திரன்; மூத்த புத்திரன்; உத்தம புத்திரன் இராமன். இவன்பிரிந்தால் மற்ற மூன்று பேரும் உயிருடன்வாழார். நானும் இனிய உயிரோடு வாழமாட்டேன். யானோ வயோதிகனாய்விட்டேன். வயோதிகத்தினால் இனிச்செய்வதுயாதொன்றும் அறியாதவனாய் மிக துயருறுகின்றேன்.

நயத்தினால் இராமனை விடுவதற்கு தசரதன் சம்மதிக்கமாட்டான் என்பதை உணர்ந்தார் விசுவாமித்திரர். தசரதனைப் பயப்படுத்தியே இராமனைப் பெறவேண்டுமெனத் திருவுளங்கொண்டார். மன்னனே! விரும்பியதைக் சொடுத்தேன் என்று சொன்ன சத்தியந்தவறினாய்! சிங்கம்போன்ற அரசனான நீ அற்ப மிருகத்தின் இயல்பைச் செய்தாய்! மனைவி, புத்திரர், சுற்றத்தாரோடு நீ வாழ்வாய்; நான் செல்லுகிறேன் என்று கோபித்து எழுந்தார் முனிவர். முனிவருடைய கோபத்தை உணர்ந்தார் வசிட்ட முனிவர். அரசனை நோக்கினார். "மனுவம்சத்திற் பிறந்தவனாய் தசரதர்ச் சக்கரவர்த்தி என்னும் பெயரைப்பெற்றிருக்கின்ற நீசொன்னசத்தியத்தைக் காப்பாற்றிக்கொள். உன்வாக்குப் பிறழுமானால் வேறேயார் காக்கவல்லவர். உம்மால் நிலைநிறுத்தப்பட்ட இராசநீதியை பூமியிலுள்ளவர்கள் கடவாமற் காப்பாராயின், நீர் மாத்திரம் அதனைக் கடக்கமுடியுமா? இவ்விசுவாமித்திரரிஷியோ இராமனை அமிர்தத்தைப்போலக் காப்பார். போரையே வாழ்வாக உடைய இராட்சதர்களது தீமையும் உண்டாகாது" வசிட்டமுனிவரின் வார்த்தைகள் தசரதரின் கண்களைத் திறந்தன. தசரதன் பரிசனங்களை விளித்து இராமன் என்னசெய்கின்றான் என்று பார்த்து வாருங்கள் எனக்கட்டளையிட்டான்.



ஸ்ரீ இராமர் தீர்த்தயாத்திரைசென்று திரும்பியபின் முன்போல் இல்லை. புதியவராகவே காணப்படுகின்றார். பழமையான நித்திய கருமங்களிற் சிலவற்றை வேண்டாவெறுப்பாகவே செய்கின்றார். இன்பத்தைக் கொடுக்கின்ற மகளிரும் செல்வமும் வீடும் நிலையற்றவையாதலினால் இவற்றால் என்ன பிரயோசனம் என்கின்றார். வெள்ளிய நல்லவஸ்திரமும். அறுசுவை உண்டியும். குளிர்ந்த ஜலமும் ஆகியவற்றில் கருத்தில்லாது இருக்கின்றார் செருக்குநீக்கிய துறவிகளைப்போல அபிமானத்தையும், சுகங்களிற் சந்தோசித்தலையும், துக்கத்தில் வருந்துதலையும் நீக்கியிருக்கின்றார். நிறைந்தசெல்வம் ஆபத்துக்கிடமானது என்றுகருதி அவாவைவிட்டு சகலருக்கிங் கொடுக்கின்றார். அவர் நினைவை யாங்கள் அறிந்திலேம். இவ்விளவரசருக்கு எவர்கள் அரசிற்குரிய நற்குணங்களைக் கற்பிக்கவல்லவர்கள்? இப்போது தொடர்ந்திருக்கின்ற செயலிது என்று வணங்கிச் சொன்னார்கள்.

இராமன் செயலனைத்தும் ஒன்றும் விடாமற் கேட்டுக்கொண்டிருந்த முனிவர் இராமனைத் தனியாக அழையுங்கள் என்று உத்தரவிட்டார். இராமனுக்கு உண்டாயிருக்கின்ற இந்த மகாமோகமானது ஆசையினாலும் ஆபத்துக்களினாலும் வந்ததன்று. விவேகத்தினால் வராநின்ற ஞான சம்பத்தாகும். ஆத்ம விசாரணைசெய்தால் மயக்கம் நீங்கி எங்களைப்போலப் பிரமத்தில்லயித்து ஆறுதல் பெறுவார் என்றார். சபையை நாடிவந்த இராமர் தந்தையையும் முனிவர்களையும் வணங்கி எழுந்து நின்றார். தசரதர் புத்திரவாஞ்சையோடும் மகனே இங்குவா என் மடிமீதிருப்பாயாக என்று

அழைத்தார். இராமர் தந்தையிடம் செல்லாமல் மடித்த வஸ்திரமொன்றைப் பூமியின்கண் விரித்து அதில் இருந்தார். தசரதர் மகனை நோக்கி, மகனே! நற்சுகங்கள் எல்லாம் தேடி வந்தடையும் பாக்கியத்தையுடைய நீ மூடர்கள்போல கணநேரமாயினும் மனஞ்சோர்ந்து தேகம் மெலிந்திருப்பதைக் காண மனம் வெதும்புகின்றது. எமது குலகுருவும் பிரம்மரிஷியுமாகிய வசிட்ட முனிவர் கூறிய ஜீவன் முக்தநிலையை, ஆசையைப் பொருந்தாத மனமுடைய நின்னையொத்தவர்கள் அடைந்தார்கள். நீயேன் வீணாக வருந்துகின்றாய். மோகம் நீங்கினால் துன்பங்கள் உன்னை எட்டியும் பார்க்கமாட்டா. குரு உபதேசத்தினால் விளங்கும் ஆத்மானுபவத்தினால் மோகத்தை வெல்லவேண்டும்.

[தொடரும்]

---

## சாரதா தேவியாரின் மணிமொழிகள்

இப்பிரபஞ்ச முழுவதும் பரந்து நிற்கும் இறைவனிடம் வேண்டிக் கொள்க. அவன் தனது கருணையை உன்மீது பொழிவான்.

துக்கத்திலடிபட்ட உங்கள் இதயத்தை இறைவனுக்குத்திறந்து காட்டுங்கள். கண்ணீர் சிந்தி, “இறைவனே! என்னை உன்பால் இழுத்துக்கொண்டு மனஅமைதி தந்தருள்க.” என்று மனமாரப் பிரார்த்தியுங்கள். அவ்வாறு எப்போதும் செய்வதன்மூலம் படிப்படியாக உங்கள் மனம் அமைதியடையும்.

---

## உலக வாழ்க்கை

உன் மனைவியார்? உன் மகன் யார்? நீதான் யார்? எங்கிருந்து வந்தாய்? இவ்வுலக வாழ்க்கையே ஒரு விசித்திரம். இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் உன் மயக்கம் தெளியும். அப்போது 'இந்த உன் ஜீவாத்மா பரமாத்வே என்பதை உணர்வாய்.

—சங்கரர்.

---



# புண்ணியம்-பாவம்

(காமகோடி)

புண்ணியம் ஏது? பாவம் ஏது? என்ற அறிவுடன் மனிதர்கள் நடந்துகொள்ளுகிறார்கள். மனிதர்களுக்கும் இதர ஜந்துக்களுக்கும் இது ஒரு பேதம். சுவபாவத்தை ஒட்டி மிருகங்கள் நடக்கின்றன. தீமையை விலக்கி நன்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற எண்ணம் மிருகங்களிடம் எழுவதில்லை. மனிதனோ நல்லதென்று தோன்றுவதை விலக்கவும் முயற்சிசெய்கிறான். தனக்கு சுவபாவமாயுள்ள போக்குகளை அடக்குகிறான். இவ்வித மேலான யத்தனம் சில வேளைகளில்தான் அவனிடம் காணலாம். ஆனால் ஒவ்வொரு மனிதனும் நல்லதையே விரும்புகிறான் என்பதில் சந்தேகமில்லை.

எது சரி? எது தப்பு? என்பதைப் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். நன்மை பயக்கக்கூடியது எதுவோ அதுவே நல்லது என்று சிலரின் கொள்கை. மேல்நாட்டு ஞானிகளின் சித்தாந்தம் இது. ஜனநாயகக்கொள்கையை ஆதரிக்கிறவர்கள் இந்த நியாயத்தை ஏற்றுக் கொண்டவர்கள். அதிகப்படியான ஜனங்கள் எதைவிரும்புகிறார்களோ அதுவே சரி. எதை அவர்கள் வெறுக்கிறார்களோ அது தவறு என்பது அவர்கள் கொள்கை. இதிலிருந்து அதிகமாயுள்ள ஜனங்களுக்கு எது தகுந்ததாயிருக்கிறதோ அதுவே நல்லது என்பது அவர்கள் கொள்கை என்று ஏற்படுகிறது. ஆனால் இதில் பிழையுண்டு. இன்றைக்குப் பல ஜனங்கள் ஒன்றை உயர்ந்ததாகச் சொல்லுவார்கள். நாளைக்கு அதையே மிகக் கெட்டதென்று தூக்கியெறிந்துவிடுவார்கள்.

தர்மத்தை அறிவதற்கு இது வழியல்ல. வேறு என்று நம்முடைய ரிஷிகள் கருதியிருக்கிறார்கள். நல்லது கெட்டது அறிந்து கொள்ள மேல் நாட்டாரோ மற்ற அயல் நாட்டாரோ நமக்கு பிரமாணமில்லை. “ஸ்ரீமத்பகவத் கீதை ஒன்றிலேயே நமக்கு வேண்டிய பிரமாணங்களெல்லாம் இருக்கின்றன. நாம் அன்னியரிடத்

தில் பிச்சைக்குப் போகவேண்டியதில்லை" என்று நாம் அறியவேண்டுமென்று லோகமான்ய திலகர் வெகு பாடுபட்டார்.

ஆனால் திலகர் ஒரு அம்சத்தில் பிசகிப்போனார். ஞானமார்க்கத்தைக் காட்டிலும் கர்மமார்க்கத்திலேயே கீதையின் தாத்பர்யமென்று அவர் எழுதிய கீதா ரஹஸ்யத்தில் சொல்லுகிறார்.

உண்மை ஞானமுடையவன் செய்யும் கர்மங்களே உயர்ந்தவை. அவனுடைய மனது சுத்தமாயும், பற்றற்றதாயும் இருக்கும் என்று ஸ்ரீ திலகர் அபிப்பிராயப்படுகிறார். சதாசாரத்தினாலும், சாஸ்திரத்தில் விதித்த கர்மங்களைச் செய்வதாலும் சித்த சுத்தி உண்டாகிறது. சுத்தியடைந்த ஹிருதயத்தில் சத்தியத்தை தியானம்செய்து உண்மை ஞானம் அடையவேண்டும். நல்லகாரியங்கள் ஞானத்தின் பலனாக செய்வதல்ல. ஞானம் அடைவதற்காகவே அவைகளைச் செய்வது அவசியம். எல்லாவிடங்களிலும் பிரும்மத்தைப் பார்ப்பதே சத்திய ஞானம். அது சித்தியடைந்தால் கர்மங்கள் செய்ய அவசியமில்லை. ஏதாவது ஒருபலனை உத்தேசித்துத்தான் மனிதன் கர்மங்கள் செய்கிறான். பலனை அடைந்தபின் கர்மங்கள் செய்து அடையவேண்டியது அவனுக்கு ஒன்றுமில்லை. பிரபஞ்சத்தின் மாயையைத்தாண்டி சர்வாத்ம நிலையை அடைந்தவர்களுக்கு சம்சார பந்தமில்லை; பிறப்புமில்லை; இறப்புமில்லை. அவர்கள் கர்மங்கள் செய்வது அக்ஞானத்தினால் கஷ்டப்படுகிறவர்களிடம் கருணைகொண்டு அவர்களும் உய்யவேண்டி உபகாரம் செய்வதற்காகவே.

ஜன்மமெடுத்தவர்களெல்லாம் அடையவேண்டிய கடைசிப் பலன் எதுவோ அதற்குச் சாதகமாயுள்ளதை நல்லதென்றும், விரோதமாயுள்ளதை கெட்டதென்றும் சொல்லவேண்டும். மனதும், புத்தியும், சுத்தியடையும் வரையில் உண்மை அறிவு உண்டாகாது. நல்ல கர்மங்களைச் செய்வதால் சித்தம் சுத்தியடையவேண்டும்.

குருவினிடத்தில் பக்தியும், விக்ரகங்களில் பகவானை தியானம் செய்வதும் புத்திக்குத் தெளிவைக்கொடுக்கும். ஞானத்திற்கும் தியானத்திற்கும் வித்தியாசமுண்டு. ஒரு பொருள் உண்மையில் எப்படி இருக்கிறதோ அப்படியே அறிவது ஞானம். அவரவருடைய இஷ்டத்தைப் பொறுத்து மாறக்கூடியதல்ல ஞானம். ஆகையால் ஞானம் ஏகரூபமானது. அத்வைதம். தியானம் பண்ணும்



போது அவரவர் இஷ்டத்தை அவரவர் அனுசரிக்கலாம். சுவபாவப்போக்கை யொட்டி தியானத்தை மாற்றிக்கொள்ளலாம். இந்த விஷயத்தில் எல்லோரும் ஒரேமாதிரியாய் கட்டுப்படவேண்டுமென்பதில்லை. சத்தியமான பொருள் ஒன்றே. அதை அடைய சாதனங்கள் அளவிறந்தன. உலகங்களெல்லாம் பகவத் சுவரூபமே. எல்லாப்பொருள்களும் பகவானே. நமக்கு இஷ்டமான இடத்தில் மனதை நிறுத்தி பகவத் சுவரூபத்தைத் தியானம் செய்யலாம். தியானம் செய்யும்போது, ஒரு குறிப்பிட்ட பொருளை நாம் பகவானாக நினைக்கிறோம்.

யாரை குருவாய் அடைவதென்பதிலும், இஷ்டதேவதையைக் கொள்ளும்போதும் மிகுந்தகவலை செலுத்தவேண்டும். குருவினிடம் குற்றங்களிருக்கலாம். ஆனால் குற்றங்களை மறந்து அவரே பகவத் ரூபமென்று நினைக்கவேண்டும். இல்லாவிட்டால் கெடுதி உண்டாகும். குருவினிடமும் இஷ்ட தேவதையினிடமும் பகவானை சதா தியானம் பண்ணி பரம நிலையை அடையவேண்டும்.

வேத சாஸ்திரங்களைப் பின்பற்றி, காமங்களைவிட்டு கர்மங்களைச் செய்து பூரணமான சிரத்தையுடன் நல்வழியைக் கடைப்பிடித்து சித்த சுத்தியடைந்து பிறவிப் பெரும்பொருளை எல்லாரும் அடைவதற்கு முயற்சிசெய்யவேண்டும். இதற்கு ஈசன் அருள்புரிவாராக.

### அன்னைக்குப் பிரார்த்தனை.

புரிகஅருள் நினைவணங்கும்
புதல்வர்க்கே பெருந்தேவி
தருகசரண் தாளிணையிற்
கருணைமயீ வணங்குவனே
ஞானமருள் சாரதையே
நானுடுத்தாய் சந்ததமும்
ஈனமறுத் தெமைக்காப்பாய்
இறைஞ்சுவன்யான் கருணைமயீ.

[சுவாமி அபேதாநந்தர்]

# சுவாமி சிவானந்தரின் அறிவுரைகள்

## எல்லோரிடமும் அன்பு காட்டு

எல்லோரிடமும் அன்பு காட்டு. தூய்மையாயிரு. ஆத்மபாவத்துடன் எல்லோருக்கும் சேவைசெய். உன் இந்திரியங்களைப் பூரணமாய் அடக்கு. உன் கையே உனக்குதவி. நிறுத்தாமல் இறைவனருளுக்காக முயற்சிசெய்.

ஆண் பெண் என்ற வேற்றுமை பாராட்டாதே. பெண்களுடன் இருக்கும்போது 'ஒரே சச்சிதானந்த ஆத்மா' என்று திரும்பத் திரும்பச் சொல். உன்னிடத்திலுள்ள அதே ஆத்மாதான் பெண்களின் உள்ளத்திலும் இருக்கிறது. எனவே ஆண்: பெண் வேற்றுமை மறைந்துவிடும். அவர்களிடத்தில் தெய்வத்தையேகாண்பாய்.

எல்லோருடைய கைகள் மூலமாகவே கிருஷ்ணபரமாத்மா வேலை செய்கிறார்: எல்லோருடைய கண்கள் மூலமாகவே அவர் பார்க்கிறார்: எல்லோருடைய காதுகள் மூலமாகவே அவர் கேட்கிறார் என்று நினைத்துக்கொள். ராதையைப்போல் பாடு. கோபிகைளைப்போல் அவருடைய தரிசனத்திற்காக ஏங்கு: கண்ணனின் அருள் கட்டாயமாக கிட்டியே தீரும். அவன் உன்னுடைய சிரஞ்சீவித்தோழன். நீ கண்ணனைக் காண்பாய்.

## கொடு கொடு

தான தருமங்களின்மூலம் பாபங்கள் நசித்துப்போகின்றன இயேசு நாதர் சொல்லுகிறார்:- "தானம் எண்ணற்ற பாபங்களை நிவிர்த்திக்கிறது." கீதை சொல்லுகிறது "வேள்வி, தானம், நியம நிஷ்டைகள் முதலியன மனிதர்களைப் பரிசுத்தப் படுத்துவனவாகும்.

கஷ்டத்தில் கிடந்துழலும் மனிதவர்க்கத்தின் சுகத்திற்காக மட்டற்ற தானம் செய்வது துர்க்குணத்தையே நசிக்கச் செய்வதற்கு ஒரு சிறந்த வழியாகும். ஏழைகளைக் காணுந்தோறெல்லாம் அவர்கள் கஷ்டப்படும் போதெல்லாம் பணத்தைத் தண்ணீராகப் பாவித்து அவர்களுக்குக் கொடு. நீ பிறருக்குக் கொடுத்தால், உலகின் செல்வம் எல்லாம் உனதாகிவிடும். செல்வம் உன்னைத் தேடி வரும். இது மாற்றமுடியாத இயற்கையின் விதியாகும். எனவே கொடு, கொடு.

# தீயோரிடமும் கடவுளைக் காணலாம். (விநோபாஜி)

இந்தச் சிருஷ்டி எங்கும் பல்வேறு உருவங்களில்—புனிதமான ஆறுகளாயும், பெரிய மலைகளாயும், ஆழ்ந்த கடலாயும் பிள்ளைப்பாசமுள்ள பசுவாயும், சிறந்த குதிரைகளாயும், வீரம் மிக்க சிங்கமாயும், இனிய குயிலாயும், அழகிய மயிலாயும், சுத்தமான, தனிமையை விரும்பும் பாம்பாயும், சிறகை அடித்துக் கொள்ளும் காகமாயும், ஓங்கி எழும் தீயாயும், அமைதியான நட்சத்திரமாயும், எங்கும் கடவுளேதான் வியாபித்திருக்கிறார். கண்களை அவரைக்காணப் பயிற்றுவிக்கவேண்டும். முதலில் பெரிதான சுலபமான எழுத்துக்களையும் கற்கவேண்டும். பிறகு நுண்ணிய சிக்கலான எழுத்தையும் கற்கவேண்டும். சிக்கலான எழுத்துக்களைக் கற்காதவரையில் படிப்பில் முன்னேற்றம் ஏற்படாது. வார்த்தைக்கு வார்த்தை அடிக்கடி சிக்கலான எழுத்துக்கள் வரும். தீயோரிடமுள்ள பரம்பொருளைப் பார்க்கவும் கற்கவேண்டும். இராமர் நமக்குப் புரிகிறார்; ஆனால் இராவணனும் புரியவேண்டும். பிரகலாதன் புரிகிறான். இரணியகசிபும் புரியவேண்டும். வேதத்திலுள்ள ஒரு வசனம் பின்வருமாறு:-

"அந்தத் திருடர் தலைவருக்கு நமஸ்காரம்; அந்தக் கொடியவர்களுக்கு. ஹிம்சை புரிவோர்க்கு நமஸ்காரம்; அந்த மோசக்காரர், திருடர், கொள்ளைக்காரர் ஆகிய அனைவரும் பிரம்மமே. அவர்கள் அனைவருக்கும் நமஸ்காரம்."

இதன் பொருள் என்ன? இதன் பொருள் சுலபமான எழுத்துக்களைக் கற்றுக்கொண்டாய் விட்டது. இனி கடினமான எழுத்துக்களையும் கற்பாய் என்பது. 'வீரர் வழிபாடு' என்று ஒரு புத்தகம். அதில் நெப்போலியனையும் ஒரு வீரனென்று. தேவ அம்சம் பொருந்தியவனென்று கூறப்பட்டுள்ளது. இங்கே சுத்தப்பரம்பொருள் அல்ல. கலப்படமான பரம்பொருளே இருப்பது. ஆனால் இந்தப் பரம்பொருளையும் புரிந்து கொள்ள வேண்டும். இதனாலேயே துளசிதாசர் இராவணனை இராமருடைய விரோதியான பக்தனென்று கூறியிருக்கிறார். ஆம் இந்தப் பக்தனுடைய தன்மையும் போக்கும் சிறிது வேறானதே. தீ படுகையில் கால் கொப்பளித்து வீங்கிப்போகிறது. ஆனால் வீக்கத்திற்குச் சூடான ஒத்தடம் கொடுத்தால் அது அடங்கிவிடுகிறது. இரண்டிலுமுள்ளது ஒரே தீ. ஆனால் அவை வெவ்வேறுவகையில் செயல்படுகின்றன. இராமரிடத்தும் இராவணனிடத்தும் வெவ்வேறுவகையில் செயல்பட்டபோதிலும் அவ்விருவரிடத்திலும் உள்ள பரம்பொருள் ஒன்றே.

19 | 60

Regd. at the G. P. O. as a News Paper H. D.

கொக்குவில் மகாத்மாகார் ... ர்த்த

# ஹரிஜன மாணவர் ... நிதி

## அறிவித்தல்

நமது நாட்டிலுள்ள வறியஹரிஜன மா... ன் கல்விக்குப் பணவுதவி செய்வதற்காக ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உதவிபெற விரும்பும் மாணவர்கள், அதற்குரிய விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்திசெய்து, காரியதரிசி, மகாத்மா காந்தி ஞாபகார்த்த ஹரிஜன மாணவ சகாயநிதி. c/o ஸ்ரீ இராமகிருஷ்ண சைவவித்தியாசாலை கொக்குவில் என்ற விலாசத்திற்கு 25-12-56க்கு முன் அனுப்பவேண்டும். பிந்திய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

*விண்ணப்பப் பத்திரங்கள் காரியதரிசியிடம் பெற்றுக்கொள்ளலாம்*

நிபந்தனைகள் வருமாறு

1 மாணவர் இவ்வருடம் 5-ம் வகுப்புச் சித்தியெய்தியவராயும் 1-1-57-ல் பன்னிரண்டு வயசுக்குட்பட்டவராயும் இருத்தல் வேண்டும். (5-ம் வகுப்பு முடிபுகளை விண்ணப்பத் தேதிக்குள் பெறமுடியாதவர்கள் அவற்றைப் பெற்றவுடன் தலைமை ஆசிரியர் மூலம் தெரிவிக்கவேண்டுமென்ற நிபந்தனையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.)

... ாவை எண் பொ... ம்பந்தமான ஒரு எழுத்துப் பரீட்சையும் நேர்மு... சயும் கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ...தியாசா... ண்டபத்தில் ...நிச்சபையாரால் நடத்தப்... வ்விஷயங்களிலும் சபை...ன் தீர்ப்பே முடிவானது

தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் தமக்கு வசதியான இந்துக்கல்லூரி ஒன்றில் G. C. E. வகுப்புவரை படிக்க வருடமொன்றுக்கு 60/- ரூபா வீதம் 5 வருடங்களுக்குப் பணவுதவியளிக்கப்படும். நிதிப்பொறுப்பாளர்சபை பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் திருப்தியில்லாவிட்டத்து ... ப்பணம் நிறுத்தப்படும். பணஉதவி பெறும்பிள்ளைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் காரியதரிசிக்கு தவணைததேர்வு அறிக்கைகளை அனுப்பவேண்டும்

4 இவ்வருடம் 6 பிள்ளைகள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்

5 விண்ணப்பம் அனுப்புவோருக்குப் பரீட்சைத்தேதி பின்னர் அறிவிக்கப்படும்

*காரியதரிசி*

*மகாத்மாகாந்தி ஞாபகார்த்த ஹரிஜனமாணவர் சகாய நிதி*

Editor, K. Ramachandra,
Printed & Published by N, Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 15-12 56